**தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2013**
---------------------------------------------------------------------

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
---------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
---------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | XXXIX ஆம் தேசிய விளையாட்டு விழா செலவினம் | 2,480,500 | கொடுப்பனவு விபரம் |
| (ii) | இலங்கை காற்பந்து சம்மேளனத்திற்கான செலவினம் | 236,000 | பற்றுச்சீட்டுக்கள் |
| (iii) | காற்பந்து சம்மேளன செயலாளரின் வெளிநாட்டு தங்குமிடச் செலவினம் | 110,000 | சிட்டைகள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2008 ஏப்ரல் 28 ஆம் திகதிய 431 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணத்திற்காக விமானப் பயணச்சீட்டுக் கொள்வனவு ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து இருக்கைகள் |

ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அழைப்பின் படி மூன்று உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக தனியார் கம்பனியொன்றினூடாக வெளிநாட்டு விமானக் கம்பனி ஒன்றிடமிருந்து வியாபார வகுப்பிலான விமானப் பயணச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து ரூபா 1,151,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சர்வதேச பாடசாலை வலைப்பந்துப் போட்டியில் கலந்துகொள்வதற்காக ரூபா 121,350 தொகை செலவிடப்பட்டு விமானப் பயணச்சீட்டுக்கள் தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ஆ) | 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்ற பின் கூடிய விரைவில் நிதியத்தின் நிர்வாகம் குறித்த அறிக்கை அமைச்சுச் செயலாளரால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 12,468,672 பற்றாக்குறையானதுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 19,923,798 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிவிளைவுகளில் ரூபா 32,392,470 தொகையான வீழ்ச்சி காண்பிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையின் விளையாட்டுக்களுக்கு தைரியமூட்டுதல், அவற்றை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிதியத்தின் முக்கிய நோக்கான போதிலும் இதற்காக கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. விளையாட்டுச் சமூகங்களாலும் தனிநபர்களாலும் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் ஏதேனும் பணத்தை வழங்குவதற்கு மாத்திரம் தற்போது நிதியச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டுக்கள் நிதியத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் திருத்திய பாதீடு 2013 திசெம்பர் 18 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதீடு தயாரிக்கப்படுகையில் சார்க் செயற்பாட்டு அலுவலகத்தின் செலவினத்திற்காக பாதீட்டின் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் ஆண்டின் போது ரூபா 155,000 தொகை அலுவலகச் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) உள்ளபடியான வருமானம் பாதீட்டு வருமானத்தைப் பார்க்கிலும் ரூபா 20,610,057 தொகையால் அதாவது 22 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் உள்ளபடியான செலவினம் பாதிடப்பட்ட செலவினத்தைப் பார்க்கிலும் ரூபா 8,096,384 ஆல் அதாவது 9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும் பாதீட்டின் மூலம் ரூபா 45,000 தொகையான தேறிய மிகை எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 12,468,672 தொகையான தேறிய பற்றாக்குறை அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிதியப் பயன்பாடு
(இ) வருமானம்
(ஈ) கணக்கீடு
(உ) உதவி வழங்கல்